# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு விடைத்தாள்களை திரையில் மதிப்பிடும் முறை (ஓஎஸ்எம்) குளறுபடி பெரும் சர்ச்சையாகியுள்ள நிலையில், சிபிஎஸ்இ தலைவர் ராகுல் சிங் மற்றும் செயலர் ஹிமான்ஷு குப்தா ஆகியோர் அந்தப் பதவிகளிலிருந்து மாற்றப்பட்டனர்.

(i) சிபிஎஸ்இ புதிய தலைவராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி லோகண்டே பிரசாந்த் சீதாராம் நியமிக்கப்பட்டுள்ளார். வாரியத்தின் புதிய செயலராக மூத்த அதிகாரி வருண் பரத்வாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ii) மேலும், ஓஎஸ்எம் முறை ஒப்பந்தம் விடப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஒரு நபர் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

- திறன் மேம்பாட்டு ஆணையத் தலைவர் எஸ். ராதா செளஹான் தலைமையில் இந்த ஒரு நபர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சரவைச் செயலகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பாணையில் தெரிவிக்கப்பட்டது.
- இந்த குழு, தேவைப்பட்டால் பிற துறை சார்ந்த அலுவலர்களை உதவிக்காக நியமித்துக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஒரு மாதத்துக்குள் தனது அறிக்கையை மத்திய பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறையிடம் சமர்ப்பிக்கும் என்றும் அந்த அறிவிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) நாடு முழுவதும் சுமார் 17.68 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதிய சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் கடந்த மே மாதம் 13-ஆம் தேதி வெளியிடப்பட்டது. தேர்வில் 85 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் தேர்ச்சி அடைந்தனர்.

(iv) முதல்முறையாக ‘திரையில் மதிப்பிடுதல்’ (ஓஎஸ்எம்) முறையில் 12- ஆம் வகுப்பு விடைத்தாள்களை சிபிஎஸ்இ மதிப்பீடு செய்தது. இந்த நிலையில், 12-ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டை விட 3 சதவீதம் குறைந்ததோடு, பல மாணவர்கள் மிகக் குறைந்த மதிப் பெண்களுடன் தேர்ச்சிபெற்றனர். இதன் காரணமாக, புதிய 'திரையில் மதிப்பிடுதல்’ நடைமுறை மீது தொடர்ந்து பல்வேறு புகார்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. விடைத்தாள்கள் சரியாக 'ஸ்கேன்' செய்யப்படவில்லை என்பன உள்ளிட்ட பல புகார்களை மாணவர்கள் முன்வைத்தனர்.

(v) இந்த நிலையில், தெலங்கானா மாநிலத்தில் ஏற்கெனவே மிகப் பெரும் குளறுபடியில் சிக்கிய ‘கோயெம்பட் எஜுடெக்' என்ற நிறுவனத்திடம் இந்த ஓஎஸ்எம் முறை தொடர்பான ஒப்பந்தத்தை சிபிஎஸ்இ வழங்கியது வெளிச்சத்துக்கு வந்தது. அதுமட்டுமன்றி, இந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை அளிப்பதற்காக, ஒப்பந்த நிபந்தனைகளில் தளர்வு அளித்து சிபிம எஸ்இ திருத்தங்கள் செய்ததாகவும் புகார்கள் எழுந்தது மிகப் பெரிய சர்ச்சையானது.

(vi) மேலும், விடைத்தாள் மறும திப்பீடுக்காக, விடைத்தாள் நகல் பெறுவதிலும், கட்டணம் செலுத்துவதிலும் பல்வேறு சிக்கல்களை மாணவர்கள் சந்தித்தனர்.

2. இந்திய-அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் முழு அம்சங்களையும் இறுதி செய்வது தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை தில்லியில் தொடங்கியது.

(i) மூன்று நாள்கள் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையில், இந்திய தரப்பில் வர்த்தக துறை கூடுதல் செயலர் தர்ப்பண் ஜெயின் தலைமையிலான குழுவினரும், அமெரிக்க தரப்பில் தலைமை அதிகாரி பிரெண்டன் லின்ச் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றுள்ளனர்.

(ii) இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் முழு அம்சங்களையும் இறுதி செய்வதுடன், சந்தை அணுகல், வரி விலக்கு, சுங்க வரி மற்றும் வர்த்தக சலுகை, முதலீடு ஊக்குவிப்பு, பொருளதார பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கி, விரிவான வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது குறித்து பேச்சுவார்த்தையில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(iii) பிற நாடுகளைவிட....:

- இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் என தனது அண்டை நாடுகளைவிட அமெரிக்கா விடமிருந்து அதிக சாதகமான பலன்களைப் பெறும் நோக்கில், இந்திய தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
- முன்னதாக, இந்தியா மீது பரஸ்பர வரி, கூடுதல் வரி என 50 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஆண்டு விதித்தார். இருதரப்பு உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால், கடந்த பிப்ரவரியில் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல்திட்டம் இறுதி செய்யப்பட்டது. அதன்படி, இந்தியா மீதான கூடுதல் வரியை அமெரிக்கா ரத்து செய்தது. பரஸ்பர வரியையும் 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைத்தது.
- இந்திய தரப்பில் அமெரிக்க பொருள்களுக்கான வரிச் சலுகைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. அத்துடன், எரிபொருள், விமானங்கள்-விமான பாகங்கள், தொழில்நுட்ப சாதனங்கள் உள்பட அமெரிக்காவிடம் இருந்து அடுத்த 5 ஆண்டுகளில் 500 பில்லியன் மதிப்பிலான பொருள்களைக் கொள்முதல் செய்யும் விருப்பத்தையும் இந்தியா வெளியிட்டது.

(iv) தில்லியில் பேச்சுவார்த்தை:

- இதனிடையே, இந்தியா உள்பட உலக நாடுகள் மீது டிரம்ப் விதித்த பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, உலக நாடுகள் மீது டிரம்ப் புதிய சீரான 10 சதவீத வரியை விதித்தார். இந்த வரி விதிப்புக்கு ஃபெடரல் நீதிமன்றம் தடை விதித்தது.
- இதுபோன்ற சூழலில், இடைக்கால வர்த்தக ஒப்பந்த கட்டமைப்பை மறு சீரமைக்க வேண்டிய தேவை எழுந்தது. அதன் கீழ், இரு நாடுகளுக்கும் இடையே கடந்த ஏப்ரலில் வாஷிங்டன் நகரில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அடுத்த சுற்று பேச்சுவார்த்தை, தில்லியில் உள்ள மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சக தலைமையகத்தில் தொடங்கியது.

(v) இந்தியாவின் இரண்டாவது பெரிய வர்த்தக கூட்டாளி அமெரிக்கா. கடந்த 2025-26-இல் அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 0.92 சதவீதம் எனும் சொற்ப அளவில் உயர்ந்து, 87.3 பில்லியன் டாலராக பதிவானது. அதேநேரம், இறக்குமதி 15.95 சதவீதம் அதிகரித்து, 52.9 பில்லியன் டாலராக பதிவானது குறிப்பிடத்தக்கது.

3. இந்தியா - நேபாளம் இடையேயான எல்லைப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் எந்தவொரு மூன்றாம் தரப்பு தலையீட்டுக்கும் இடமில்லை' என்று இந்தியா தரப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

(i) இரு நாடுகளிடையேயான இந்த நீண்ட கால எல்லைப்பிரச்னைக்குத் தீர்வுகாண சீனா மற்றும் பிரிட்டனுடன் நேபாளம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அந்நாட்டு பிரதமர் பாலேந்திர ஷா தெரிவித்த நிலையில், வெளியுறவு அமைச்சகம் தரப்பில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

(ii) இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் தில்லியில் கூறுகையில், 'இந்தியா நேபாள எல்லைப் பிரச்னை தொடர்பாக நாடாளுமன்றத்தில் அந்த நாட்டு பிரதமர் பேசியதும், அதற்கு அந்த நாட்டு வெளியுறவு அமைச்சகம் பதிலளித்ததையும் இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது. இரு நாடுகளிடையேயான எல்லை 98 சதவீதம் வரையறுக்கப்பட்டுவிட்டது. எஞ்சிய சில எல்லைப் பகுதிகள் மட்டுமே வரையறுக்கப்படாமல் உள்ளது. கண்டக் நதியின் பாதை மாறியதன் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இரு தரப்பிலும் எல்லை வரையறுக்கப்பட்ட பகுதிகளிலும் சில ஆக்கிரமிப்பு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த எல்லைப் பிரச்னைக்குத் தீர்வு காண இருதரப்பு நடைமுறையை இரு நாடுகளும் வகுத்துள்ளன. எனவே, இந்த இரு நாடுகளிடையேயான விவகாரத்தில் மூன்றாவது நாட்டின் தலையீட்டுக்கு இடமே இல்லை' என்றார்.

4. டென்மார்க் பொதுத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு, 2 மாத கால பேச்சுவார்த்தையின் முடிவில் 4 கட்சிகள் அடங்கிய மைய-இடதுசாரி கூட்டணிக்குத் தலைமையேற்று மெட்டே ஃபிரடெரிக்சன் 3-ஆவது முறையாக பிரதமராகப் பொறுப்பேற்கிறார்.

5.அமெரிக்க உளவுத் துறை இயக்குநர் துளசி கப்பார்ட் ராஜிநாமாவைத் தொடர்ந்து, தற்காலிக இயக்குநராக பில் புல்டேவை அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமித்தார்.

6.வலுவான 'எல் நினோ' பருவநிலை மாற்றம் விரைவில் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், புவி வெப்பமயமாதலால் இதன் பாதிப்புகள் மேலும் மோசமடையும் என்றும் ஐ.நா. வானிலை அமைப்பு எச்சரித்தது.

7.அமெரிக்கா மற்றும் 'நேட்டோ' கூட்டணி நாடுகள் பால்டிக் கடற்பகுதியில் கூட்டு ராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன.

8. ஐ.நா. பொதுச் சபையின் 81-ஆவது கூட்டத் தொடரின் தலைவராக வங்கதேச வெளியுறவு அமைச்சர் கலிலூர் ரஹ்மான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(i) இதன்மூலம், கடந்த 1986-இல் ஹுமாயூன் ரஷீத் சௌத்ரிக்குப் பிறகு ஐ.நா. பொதுச் சபை தலைவராகும் 2-ஆவது வங்கதேசத்தவர் என்ற பெருமையை கலிலூர் ரஹ்மான் பெற்றுள்ளார்.

(ii) மேலும், ஆப்கானிஸ்தான், எகிப்து, இராக் உள்பட 21 நாடுகளின் பிரதிநிதிகள்

துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(iii) 193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபையின் பொதுச் 81-ஆவது கூட்டத்தொடர், வரும் செப்டம்பரில் தொடங்குகிறது. சுழற்சி அடிப்படையில், இந்த முறை ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான தலைவர் பதவிக்கு வங்கதேசத்தின் கலிலூர் ரஹ்மான் மற்றும் சைப்ரஸ் நாட்டின் பன்முகத்தன்மைக்கான சிறப்புத் தூதர் ஆண்ட்ரியாஸ் காகூரிஸ் இடையே போட்டி நிலவியது. இதில் கலிலூர் ரஹ்மான் வென்று, தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

(iv) தற்போதைய ஐ.நா. பொதுச் சபையின் தலைவரும், ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான அனலெனா பேர்பாக்கிடமிருந்து கலிலூர் ரஹ்மான் பொறுப்பை ஏற்கவுள்ளார். ஐ.நா.வின் 80 ஆண்டு கால வரலாற்றில் அப்பதவியை வகித்த 5- ஆவது பெண் என்ற பெருமை அனலெனா பேர்பாக்கிற்கு உள்ளது.

(v) முகமது யூனுஸ் தலைமையிலான வங்கதேச இடைக்கால அரசில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், ரோஹிங்கியா விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதியாகவும் பணியாற்றிய கலிலூர் ரஹ்மான், கடந்த பிப்ரவரியில் தான் வங்கதேசத்தின் வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

9. நாட்டின் பண வீக்கத்தை மிகவும் துல்லியமாகக் கணக்கிடும் வகையில், தற்போது நடைமுறையில் உள்ள மொத்த விற்பனை விலைக் குறியீட்டுக்கு (டபிள்யு.பி.ஐ.) பதிலாக, உள்ளீடு, வெளியீடு மற்றும் சேவை விலைகளை விரிவாக உள்ளடக்கிய உற்பத்தியாளர் விலைக் குறியீட்டைப் (பிபிஐ) படிப்படியாக அறிமுகப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

(i) இது குறித்து வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் முதன்மைப் பொருளாதார ஆலோசகர் பிரவீன் மஹ்தோ செய்தியாளர்களிடம் கூறுகையில், '2022-23 ஆண்டை புதிய அடிப்படை ஆண்டாகக் கொண்ட திருத்தப்பட்ட டபிள்யு.பி.ஐ., ஜூன் 15- இல் வெளியிடப்படுகிறது. இதில், கணக்கீட்டுப் பொருள்களின் எண்ணிக்கை 697-லிருந்து 957-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

(ii) இத்துடன் வெளியீட்டு உற்பத்தியாளர் விலைக் குறியீடு (ஓபிபிஐ), சோதனை அடிப்படையிலான உள்ளீட்டு உற்பத்தியாளர் விலைக் குறியீடு (ஐபிபிஐ) மற்றும் வங்கி, காப்பீடு, ரயில்வே உள்ளிட்ட 7 துறைகளுக்கான சேவைக் குறியீடு (செர்வீஸ் பிபிஐ) ஆகியவையும் அறிமுகம் செய்யப்படவுள்ளன' என்றார்.

(iii) ஒப்பந்தங்களில் விலைவாசி டபிள்யு.பி.ஐ. அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய பிபிஐ குறியீட்டுடன் சேர்த்து டபிள்யு.பி.ஐ. குறியீடும் தொடர்ந்து வெளியிடப்படும். பயனர்கள் புதிய முறைக்கு மாறுவதற்குப் போதிய அவகாசம் அளித்த பிறகு டபிள்யு.பி.ஐ. முழுமையாக விலக்கிக்கொள்ளப்படும்.

(iv) இப்புதிய மாற்றம், சர்வதேச நிதியத்தின் (ஐஎம்எஃப்) பரிந்துரைகள் மற்றும் வளர்ந்த நாடுகளின் உலகளாவிய நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. மத்திய கிழக்கு போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை கடுமையாக

உயர்ந்துள்ள நிலையில், நடப்பு 2026-27-ஆம் நிதியாண்டின் முதல் மாதமான ஏப்ரலிலேயே நாட்டின் நிதிப் பற்றாக்குறை வருடாந்திர பட்ஜெட் இலக்கில் 21.4 சதவீதத்தை எட்டியுள்ளது.

(i) மத்திய தலைமைக் கணக்காயர் (சிஜிஏ) தரவுகளின்படி, ஏப்ரல் மாதத்தில் மட்டும் நிதிப் பற்றாக்குறை ரூ.3.62 லட்சம் கோடியாகப் பதிவாகியுள்ளது. இது கடந்த 2025-26 நிதியாண்டின் இதே மாத அளவைவிட ஏறக்குறைய இருமடங்காகும்.

11. இந்தியப் பங்குச் சந்தை ஒழுங்காற்று வாரியத்தில் (செபி) காலியாகவுள்ள 2 முழு நேர உறுப்பினர் பதவிகளை நிரப்புவதற்காகத் தகுதியானவர்களிடமிருந்து மத்திய அரசு விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது.

(i) தற்போது செபி அமைப்பில் தலைவர் தவிர்த்து, 4 முழு நேர உறுப்பினர்கள் உள்ளனர். இதில் கமலேஷ் சந்திர வர்ஷினி, அமர் ஜீத் சிங் ஆகிய இருவரின் 3 ஆண்டுகள் பதவிக்காலம் வரும் செப்டம்பருடன் முடிவடைய உள்ளது. இந்நிலையில், புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகளை மத்திய நிதி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொருளாதார விவகாரங்கள் துறை தொடங்கியுள்ளது.

(ii) இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பங்குச் சந்தை சார்ந்த நடைமுறைகள், சட்டம், நிதி, பொருளாதாரம், கணக்கியல் அல்லது நிர்வாகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்த அறிவாற்றலும், 20 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள் 45 முதல் 60 வயது வரம்புக்குள் இருக்க வேண்டும். மேலும், தங்களின் பணிப் பொறுப்புகளைப் பாதிக்கும் வகையிலான எந்தவொரு நிதி அல்லது இதர தனிப்பட்ட ஆதாய முரண்பாடுகளும் அவர்களுக்கு இருக்கக் கூடாது.

(iv) இத்தகைய தகுதியுடையவர்கள் வரும் ஜூன் 30-க்குள் விண்ணப்பிக்கலாம். மத்திய அரசின் நிதித் துறை ஒழுங்குமுறை நியமனங்கள் தேடல் குழுவின் பரிந்துரையில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

12. ஸ்பெயின் நாட்டின் ஜெரஸ் நகரில் நடைபெற்ற 2026 கோபா டி எஸ்பனா வெலாசிடாட் சர்வதேச மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் பிஎம்டபிள்யு 1000 சிசி பிரிவில் வெவ்வேறு ரேஸில் 2 மற்றும் 3-ஆவது இடங்களை வென்ற சென்னை பைக் வீரர் கவின் குயின்டால். ஸ்பானிஷ் ஈஸி ரேஸ் அணியில் இடம்பெற்ற சென்னை வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

13. எஸ்யு 30 எம்கேஐ ஜெட் விமானத்திலிருந்து தரையில் உள்ள இலக்கை நோக்கிச் செலுத்தப்பட்ட 'ருத்ரா' ஏவுகணை. ஒடிஸா மாநிலம் சாந்திபூரில் உள்ள சோதனை மையத்தில் நடைபெற்ற இந்த சோதனைத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்ததாக பாதுகாப்புத் துறை தெரிவித்தது. ஹைதராபாதில் உருவாக்கப்பட்ட 'ருத்ரா' ஏவுகணை வானிலிருந்து 350 கி.மீ. தொலைவிலுள்ள இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கக் கூடியதாகும்.

14. குடியேற்றம் மற்றும் வெளிநாட்டவர் விதிகள், 2025-இல் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்து மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டது.

(i) முன்பு 180 நாள் விசா (நுழைவுஇசைவு) திட்டத்தின்கீழ் இந்தியாவுக்கு வரும்

வெளிநாட்டவர்கள், அதை நீட்டிக்க விரும்பினால் அவர்களது விசா காலம் நிறைவடைந்த 14 நாள்களுக்குள் பதிவு செய்ய வேண்டும். தற்போதைய புதிய விதியின்படி 180 நாள் விசாவை நீட்டிக்க விரும்பும் வெளிநாட்டவர்கள் அதற்கு முன்பாகவே பதிவு செய்ய வேண்டும் என மத்திய அரசு வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இன்றியமையாத சூழல்களில் மட்டுமே இவ்வாறு பதிவு செய்ய முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டது. இதுதொடர்பாக அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- குழந்தை பிறக்கும் சமயத்தில் விசாவை நீட்டிக்க பெற்றோர் விரும்பினால் முந்தைய விதிகளின்படி 30 நாள்களுக்குள் புதிய விசா பெறுவது, நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனுமதி உள்ளிட்ட சேவைகளைப் - பெறுவது குறித்து பதிவு அதிகாரிகளுக்கு வலைதளம் அல்லது கைப்பேசி செயலி மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும். இந்த விதியில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெற்றோர் இருவரும் இந்தியர்களாக அல்லது ஒருவர் இந்தியராக இருக்கும்பட்சத்தில் தங்களது குழந்தைக்கும் இந்திய குடியுரிமையைத் தொடர விரும்பினால் மேற்கூறிய விதி அவர்களுக்குப் பொருந்தாது.
- அதேசமயம் இந்திய குடியுரிமையைப் பெற்றுள்ள அந்தக் குழந்தை எதிர்காலத்தில் வேறொரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றால் அதிலிருந்து 30 நாள்களுக்குள் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் இதுதொடர்பான தகவலை பதிவு அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

15. முதல் புகையற்ற தலைமுறையை உருவாக்க ஐக்கிய ராஜ்ஜியத்தால் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம்.

(i) புகையிலை விற்பனைக்கு வரலாற்றுத் தடை

- பிரிட்டிஷ் பாராளுமன்றம் "புகையிலை மற்றும் வேப்ஸ் மசோதா 2026"-ஐ நிறைவேற்றியுள்ளது, இதற்கு ஏப்ரல் 29, 2026 அன்று மன்னர் மூன்றாம் சார்லஸ் அரச ஒப்புதல் அளித்தார்.
- ஜனவரி 1, 2009 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட்டுகள் அல்லது புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வதை இந்தச் சட்டம் ஒரு குற்றச் செயலாக ஆக்குகிறது.
- இதன் விளைவாக, தற்போது 17 வயது அல்லது அதற்குக் குறைவான வயதுடைய நபர்கள், எதிர்காலத்தில் அவர்களின் வயதைப் பொருட்படுத்தாமல், தங்கள் வாழ்நாளில் புகையிலையை சட்டப்பூர்வமாக வாங்க ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ii) வேப்பிங் மீதான கட்டுப்பாடுகள்

- இந்தச் சட்டம் மின்னணு சிகரெட்டுகளின் (வேப்பிங்) பயன்பாட்டையும் குறிவைத்து, அவற்றின் விநியோகத்திற்கான விதிமுறைகளைக் கடுமையாக்குகிறது.
- கார்களுக்கு உள்ளேயும், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் விளையாட்டு அரங்கங்களுக்கு வெளியேயும் உட்பட, குறிப்பிட்ட சில பகுதிகளில் வேப்பிங் செய்வது இப்போது கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

(iii) பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார நோக்கங்கள்

- பிரிட்டனில், புகைபிடித்தலால் ஆண்டுதோறும் சுமார் 64,000 பேர் உயிரிழக்கின்றனர், மேலும் வயது வந்தோரில் 10% பேர் தற்போது புகைபிடிக்கின்றனர்.
- இந்த சீர்திருத்தங்கள் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றும் என்றும், அரசு மருத்துவமனைகளின் மீதான அழுத்தத்தை கணிசமாகக் குறைக்கும் என்றும் சுகாதாரச் செயலாளர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் வலியுறுத்தினார்.
- புகையிலைத் தொழில் வரி செலுத்த வேண்டியிருந்தாலும், புகையிலை விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயை விட, புகைபிடித்தல் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான செலவு மிக அதிகம் என்று அரசாங்கம் கூறுகிறது.

(iv) புகைபிடித்தலுக்கு எதிரான முயற்சிகளின் வரலாற்றுப் பின்னணி

- பிரிட்டனில் புகையிலைக்கு எதிரான எதிர்ப்பு, முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. அவர் 1604-ல் "புகையிலைக்கு எதிரான ஒரு எதிர் தாக்குதல்" (A Counterblaste to Tobacco) என்ற நூலை வெளியிட்டார். அதில், புகையிலையை மூளைக்கும் நுரையீரலுக்கும் தீங்கு விளைவிக்கும் ஒரு "அழுக்கான" பழக்கம் என்று விவரித்திருந்தார்.
- முதலாம் ஜேம்ஸ் மன்னர், புகையிலைப் பயன்பாட்டை ஒழிப்பதற்காக அதன் மீது 4,000% வரி உயர்வைக்கூட விதித்திருந்தார்.
- பிரிட்டனில் 1565-ஆம் ஆண்டு முதல் புகைப்பிடிக்கும் பழக்கம் நீடித்து வருகிறது.

(v) பொருளாதார மற்றும் சமூகக் கவலைகள்

- இந்தத் தடை, சிறு வணிகங்களையும் சில்லறை விற்பனைத் துறையையும் பாதகமாகப் பாதிக்கும் என்று சில்லறை விற்பனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
- சட்டப்பூர்வத் தடையை விட முறையான கல்வி ஒரு சிறந்த அணுகுமுறை என்று சில விமர்சகர்கள் வாதிடுகின்றனர். மேலும், பெரியவர்களை அவர்களின் பிறந்த ஆண்டின் அடிப்படையில் வித்தியாசமாக நடத்தும் ஒரு சட்டத்தின் நியாயத்தன்மையையும் அவர்கள் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

(vi) உலகளாவிய தாக்கம் மற்றும் "புகையற்ற" தொலைநோக்கு

- பிரிட்டனின் இந்த முடிவு, குறிப்பாக புகையிலை சார்ந்த இறப்பு விகிதங்கள் அதிகமாக உள்ள வளரும் நாடுகளுக்கு ஒரு உலகளாவிய முன்மாதிரியாகக் கருதப்படுகிறது.
- புகையிலையானது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 70 லட்சம் உயிர்களைப் பலிகொள்வதாகவும், இதில் இந்தியாவில் மட்டும் 13 லட்சம் இறப்புகள் நிகழ்வதாகவும் உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவிக்கிறது.
- அடுத்த தலைமுறையினர் புகையிலை அடிமைத்தனத்திலிருந்து முழுமையாக விடுபட்டவர்களாக வளர்வதை உறுதி செய்வதே இந்தச் சட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.